**24.03.2026 Page No.178/2023**

**CC.NO. 416/2022**

**எதிரி ஆஜர்.**

**அ.சா.1 கார்த்திகேயன், த/பெ.சுப்பிரமணி சிஎம்.பி.எண்.5513/2023, தேதி 09.08.2024 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

29.7.2018ம் தேதி அ.சா.2 ஆறுமுகத்திற்கு பிறந்த தினம் என்றால் சரிதான். 29.7.2018ம் தேதி அரசு தரப்பு சாட்சிகளான தினேஷ் மற்றும் ஆறுமுகம், பிரேம்குமார் மற்றும் பால் கண்ணன் ஆகியோருக்கிடையே வாய்த்தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். அப்போது எதிரி கோபிதான் சம்பவத்தை விலக்கி விட்டார் என்றால் சரிதான். 29.7.2018ம் தேதி இரவு 8.45 மணியளவில் கௌரிபுரம் கங்கா பார்சல் சர்வீஸ் அருகில் மின்விளக்குகள் எதுவும் இல்லை என்றாலும், அந்த பகுதி இருட்டான பகுதி என்றாலும் சரிதான். அந்த நேரத்தில் சுமார் 10 பேர் இருந்தோம். அன்று ஆறுமுகத்திற்கு பிறந்தநாள் என்றதால் நாங்கள் மதுபோதையில் இருந்தோம் என்றால் சரிதான். அப்போது எங்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். அ.சா.2 ஆறுமுகத்திற்கு எதனால் எப்படி காயம் ஏற்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். வெற்று தாளில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் எதிரியால்தான் எனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லியதற்கு காரணம் போலீசார் சொல்லியதன் காரணமாக தவறாக சொன்னேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் எதிரி அந்த இடத்தில் இல்லை, நான் அவரை பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி கோபியால் எனக்கும், அ.சா.2 ஆறுமுகத்திற்கும் காயம் ஏற்பட்டது என்பதை என்னால் உறுதியாக சொல்ல முடியாது அப்போது நான் மதுபோதையில் இருந்தேன். மதுபோதையில் எங்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளினால் என்ன நடந்தது என்று தெரியாது. எனக்கும் தினேஷ்குமார், சதீஷ்குமார்

ஆகியோருக்கும் எந்த முன்விரோதமும் கிடையாது என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**CC.NO. 416/2022**

**எதிரி ஆஜர்.**

**அ.சா.2 ஆறுமுகம், த/பெ.ராஜா சிஎம்.பி.எண்.5513/2023, தேதி 09.08.2024 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

29.7.2018ம் தேதி எனக்கு பிறந்த தினம் என்றால் சரிதான். 29.7.2018ம் தேதி அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 கார்த்திகேயன், தினேஷ் மற்றும் நான், பிரேம்குமார் மற்றும் பால் கண்ணன் ஆகியோருக்கிடையே வாய்த்தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். அப்போது எதிரி கோபிதான் சம்பவத்தை விலக்கி விட்டார் என்றால் சரிதான். 29.7.2018ம் தேதி இரவு 8.45 மணியளவில் கௌரிபுரம் கங்கா பார்சல் சர்வீஸ் அருகில் மின்விளக்குகள் எதுவும் இல்லை என்றாலும், அந்த பகுதி இருட்டான பகுதி என்றாலும் சரிதான். அந்த நேரத்தில் சுமார் 10 பேர் இருந்தோம். அன்று எனக்கு பிறந்தநாள் என்றதால் நாங்கள் மதுபோதையில் இருந்தோம் என்றால் சரிதான். அப்போது எங்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கு எதனால் எப்படி காயம் ஏற்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். வெற்று தாளில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் எதிரியால்தான் எனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லியதற்கு காரணம் போலீசார் சொல்லியதன் காரணமாக தவறாக சொன்னேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் எதிரி அந்த இடத்தில் இல்லை, நான் அவரை பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி கோபியால் எனக்கும், அ.சா.1 கார்த்திகேயனுக்கும் காயம் ஏற்பட்டது என்பதை என்னால் உறுதியாக சொல்ல முடியாது அப்போது நான் மதுபோதையில் இருந்தேன். மதுபோதையில் எங்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளினால் என்ன நடந்தது என்று தெரியாது. எனக்கும் தினேஷ்குமார், சதீஷ்குமார் ஆகியோருக்கும் எந்த முன்விரோதமும் கிடையாது என்றால் சரிதான்.

எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். எதிரி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட வேண்டியவர் என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**